வருடாந்த அறிக்கை 2020

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

கைத்தொழில் அமைச்சு

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையானது (தே.தொ.மு.அ) 2006ஆம் ஆண்டின் 17ஆம் இலக்கச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டது. நிறுவனத்தின் கட்டாயக் கடமையானது இலங்கையிலுள்ளள சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு (சிநதொமு) வசதிகளைச்செய்து கொடுப்பதாகும். அதிகாரசபையின் சட்டமானது, உள்ளூர் தொழில்முயற்சிகளுக்கு உட்கட்டமைப்பு வசதி, நிதி மற்றும் கொள்கை மட்டத்தில் உதவி ஒத்தாசைகளை வழங்குவதற்கு அதிகாரமளிக்கின்றது.

அதிகாரசபையானது, அதன் நேரடியான அமைச்சின் அறிவுரைகள் மற்றும் வழிகாட்டல்களுடன் பிராந்திய, அதேபோல தேசிய மட்டத்தில் பல்வேறு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளது. தே.தொ.மு.அ.வானது, 2006ஆம் ஆண்டு தொடக்கம் 2010ஆம் ஆண்டுவரை முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின்கீழ் பட்டியலிடப்பட்டிருந்தது. தே.தொ.மு.அ.வானது, 2010ஆம் ஆண்டில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின்கீழ் பட்டியலிடப்பட்டிருந்ததுடன், அதன் பின் இற்றைவரை இது கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின்கீழ் முகாமைசெய்யப்படுகின்றது.

தே.தொ.மு.அ.வானது, சி.ந.தொமு. சமூகத்திற்காக, பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்றிடங்கள் மற்றும் நடவடிக்கைகளை, பிரதேச செயலக மட்டத்தில் தொடங்கியுள்ளது. இது பொது மற்றும் தனியார் வங்கிகள், வியாபாரக் கழகங்கள், அரசுசார்பற்ற நிறுவனங்கள் (உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்கள்) போன்ற பொது மற்றும் தனியார் நிறுவனங்களுடன் தொடர்புகளைக் கொண்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் நோக்கங்களாவன, நிதிசார் உதவிகள், பயிற்சியளித்தல், மதியுரைச்சேவை ஒத்தாசைகள் போன்ற அடிப்படைத் தேவைகளை சி.ந.தொ.மு. களின் அடிமட்டத்தில் வழங்குவதாகும். சி.ந.தொமு. களை பிரதேச செயலக மட்டத்தில் (பி.செ) ஒருங்கிணைப்பதற்காக பிராந்தியமட்ட அலுவலர்கள் பிரதேச செயலக (பி.செ) மட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

1. **தொலைநோக்கும், பணிக்கூற்றும்:**

தொலைநோக்கு:

நுண், சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளினை அபிவிருத்திசெய்து முன்னேற்றுதல், பாதுகாத்தல் மற்றும் கையாள்வதற்காக முன்னிலை வகிக்கும் முகமையாகவிருத்தல்.

பணிக்கூற்று:

ஏனைய தொழில்வல்லுநர்களுடன் ஒருங்கிணைந்து மற்றும் பங்காண்மை முறையில் சுறுசுறுப்பாகவும் வினைத்திறமையாகவும் உற்பத்தி நோக்குடன் நு.சி.ந.தொ.மு.களின் வளர்ச்சி, நிலைபேறான தன்மை ஆகியவற்றை நிச்சயிப்பதற்கு இலங்கையிலுள்ள நுண், சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகளினை அபிவிருத்திசெய்தல், முன்னேற்றுதல், பாதுகாத்தல் மற்றும் தரமுயர்த்தல்.

நோக்கங்கள்:

இலங்கைக்குள், சிறிய, நடுத்தர தொழில்முயற்சி அபிவிருத்திகளை ஊக்குவித்தல், தரமுயர்த்துதல் மற்றும் வசதிப்படுத்துவதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தின் வளர்ச்சி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்திக்கு ஊக்கமளித்தல்.

தே.தொ.அ.அ.இனதுஇ சட்டத்தின் நோக்கங்களை அடையுமுகமாக உள்நாட்டுத் தொழில் முயற்சிகளினைச் சர்வதேசத்திற்கும், வெளிநாட்டுச் சந்தைக்கும் ஏற்றவிதமாக உட்புகுத்தும் நோக்கத்துடன், தொழில்முயற்சி வடிவமைப்பினை இலங்கைக்கு வெளியே தாபிப்பதையும், தொழிற்படுத்துவதனையும், ஊக்கமளித்துத் தூண்டுதல்.

கைத்தொழில் மற்றும் விவசாயத்திலான வியாபாரத்தினையும், அபிவிருத்தியினையும் கருத்தில்கொண்டு கொள்கை, திட்டம், உயர்வான ஊக்குவிப்பினைப் பொருத்தமான முறையில் வடிவமைப்பதுடன், வினைத்திறமையான ஒத்துழைப்பினையும், ஊக்குவிப்பினையும் வழங்கல்

தொழில்நுட்பத்திறனுடன் கூடிய மனித மூலதன அபிவிருத்தியில் மக்களின் அதிகாரமளித்தலை தொழில்முயற்சி அபிவிருத்தியினது ஒரு அவசியமான அங்கமாக்குதல்.

அபிவிருத்தித் தேவைகளைச் சந்திப்பதற்கு வேண்டிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திசெய்தல்.

தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் தொழிற்பாட்டிற்குத் தேவையான நிதிவசதியினை தொழில்முயற்சியாளர்களின் மூலமாகப்பெற ஏற்பாடுசெய்தல்.

உற்பத்தி, அபிவிருத்தி, தொழில்நுட்பவியல், தரமுயர்த்தல் மற்றும் வியாபாரக்குறி வர்த்தக மயமாக்கலுடன் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினை உயர்ந்த நிலைக்கு மாற்றுவதற்கு ஒரு தொழில்நுட்பவியல் அபிவிருத்தி நிதியினைத் தாபித்தல்.

பிராந்தியப் பொருளாதார அபிவிருத்திக்கு உதவுதல்.

பணிப்பாளர் சபை:

---

1. திரு. அனுஸ்கா குணசிங்க - தலைவர்

2. திரு. லக்தாஸ் - முகாமைச்சபை உறுப்பினர்
   மேலதிகச் செயலாளர்,
   சிறிய நடுத்தர வியாபாரம் மற்றும்
   தொழில் முயற்சி அபிவிருத்தி
   அமைச்சு.

2. பீ.ஜீ.பீ இராசான்ஜலி அவர்கள் - முகாமைச்சபை உறுப்பினர்
   பிரதிப் பணிப்பாளர்,பொது நிதித்
   திணைக்களம், திறைசேரி.

3. திரு. இந்திக்க நிசாந்த குணரத்ன - முகாமைச்சபை உறுப்பினர்

4. திரு. கடுப்பிற்றிகே பிரசாந்த் ஜயரங்க சில்வா - முகாமைச்சபை உறுப்பினர்

5. திரு. அமரசிங்ககே ஹேமசிறி பெரேரா - முகாமைச்சபை உறுப்பினர்

6. திரு. ஏ.எல். புத்திக்க சடறுவன் - முகாமைச்சபை உறுப்பினர்

7. திரு. ஜே.எம். ஆனந்த பிறேமதிலக - முகாமைச்சபை உறுப்பினர்

8. திரு. அசங்க விஜேசுந்தர - முகாமைச்சபை உறுப்பினர்

17 ஜனவரி 2024

கௌரவ. ரமேஷ் பதிரன
கைத்தொழில் அமைச்சர்,
கைத்தொழில் அமைச்சு.
இல.73.∴1,
காலி வீதி,
கொழும்பு 03.

கௌரவ ஐயா,

வருடாந்த அறிகை 2020

1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்கக நிதிச்சட்டத்தின் 14(2)ஆம் பிரிவின்படி, நான் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிக்கின்றேன்.

1. தேசிய தொழில்முயற்சி அதிகாரசபையின் 2020 ஆம் ஆண்டிற்கான முன்னேற்ற அறிக்கை.
2. 31 டிசம்பர் 2020 அன்றுள்ளளபடியான ஐந்தொகை, 31 டிசம்பர் 2020 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செயலவுக் கணக்கு, 31 டிசம்பர் 2020 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்வுக் கூற்று.
3. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

இப்படிக்கு,

தங்கள் உண்மையுள்ள,

லசந்த காரியபெரும

தலைமை இயக்குனர்.

வருடாந்த அறிக்கை 2020

அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

நிகழ்ச்சித்திட்டம் 01 - வியாபார அபிவிருத்திச் சேவை (வி.அ.சே) விபரக்கொத்தினைத் தயாரித்தல்

நிகழ்ச்சித்திட்டம் 02 - நுண்,சிறிய, நடுத்தர (நு.சி.ந.) தொழில் முயற்சிகளின் தரவுத் தளம்

நிகழ்ச்சித்திட்டம் 03 - பிராந்திய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

நிகழ்ச்சித்திட்டம் 04 – தொகுதி அல்லது துறைவாரியான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

நிகழ்ச்சித்திட்டம் 05 - தொழில்முயற்சிக் குழுக்கள்

நிகழ்ச்சித்திட்டம் 06 - பரீட்சித்துப்பார்த்தல் தொழில்நுட்ப கைமாற்று நிலையத்தினைத் தாபித்தல்

நிகழ்ச்சித்திட்டம் 07 – ‘‘உபாதிதாரி வையவசாயக’’ உதானய நிகழ்ச்சித்திட்டம்

நிகழ்ச்சித்திட்டம் 08 - பிராந்திய மற்றும் தேசிய மட்ட தொழில்முயற்சியாளர் விருது வழங்கும் விழாக்கள்.

நிகழ்ச்சித்திட்டம் 09 - இலங்கையின் உற்பத்தி இலச்சினையை ஊக்குவித்தலும், விருது வழங்குதலும்.

நிகழ்ச்சித்திட்டம் 10 - ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள்.

அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் - 2020.

நிகழ்ச்சித்திட்டம் 01 - வியாபார அபிவிருத்திச்சேவை (வி.அ.சே) விபரக்கொத்தினைத் தயாரித்தல்

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையானது (தே.தொ.மு.அ.) நுண், சிறிய, நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்காகவும், அதேபோல வியாபார அபிவிருத்திச்சேவை வழங்குநர்களுக்காகவும் ஒரு வழிகாட்டிக் கைநூலினை வெளியிடத் தீர்மானித்துள்ளது.

இது வியாபாரச் சேவை வழங்குநர்களது தகவல்களை உள்ளடக்குவதுடன் தொழில்முயற்சியாளர்கள் வெற்றிகரமான தொழில்முயற்சிகளினைத் தாபிக்க வழிகாட்டும் பயனுள்ள ஆவணமாகக் காணப்படும். (இதில் கிட்டத்தட்ட 200 பக்கங்கள் உள்ளன.)
தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையானது, தே.தொ.மு.அ. அலுவலர்களிடமிருந்தும், பத்திரிகை விளம்பரங்கள் மூலமும் தகவல்களைச் சேகரித்துள்ளது. இதனை 2020ஆம் ஆண்டில் பிரசுரிக்க அட்டவணைப்படுத்தப்பட்டிருந்தது. (கொவிட் 19 காரணமாக அச்சடித்தல் வேலைகள் தாமதமாயின.)

நிகழ்ச்சித்திட்டம் 02 – நு.சி.ந. தொழில் முயற்சிகளின் தரவுத் தளம்

இலங்கையில் ஏறத்தாள ஒரு மில்லியன் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சிகள் பரந்துபட்டுக் காணப்படுகின்றன. ஆயினும் எந்தவொரு நிறுவனத்தினாலும் பொருத்தமான தரவுத் தளமானது ஒரேஇடத்தில் தரவுகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக அபிவிருத்தி செய்யப்படவில்லை. வருங்காலத்தில் தீர்மானம் மேற்கொள்வதற்காக குறிப்பிட்ட துறைக்கென மூலோபாயத் தீர்மானமொன்றைத் தயாரிக்கும்போது இந்தத் தரவுத் தளமின்மையானது பாரிய பிரச்சினையாகக் காணப்படும்.

தரவுத்தளமொன்றினைத் தயாரிப்பதன்மூலம், தொழில்முயற்சியாளர்களின் தரவுகளை மென்பொருள் வடிவத்தில் தே.தொ.மு.அ.இன் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வைத்திருப்பதற்கும், அவர்கள் கால அடிப்படையில் தரவுத்தள விபரங்களை இற்றைவரைப்படுத்தவும் வழிசமைப்பதாக அமையும். தே.தொ.மு.அ.வானது

நு.சி.ந.தொ.மு.களின் தரவுத் தளத்தினைத் தயாரித்துள்ளதுடன், இது 2020 டிசம்பர் 15ஆம் திகதியன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் 03 - பிராந்திய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

சி.ந.தொ.மு.களானவை, பொருளாதாரத்தில் முதுகெலும்பாகக் காணப்படுவதாக இலங்கை அரசாங்கமானது அங்கீகாரமளித்துள்ளதுடன், நு.சி.ந.தொ.மு.களானவை, மொத்த நிறுவனங்களில் 75 சதவீதத்திற்கும் அதிகமான நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதுடன், 45 சதவீத வேலைவாய்ப்பினையும் வழங்குவதுடன், இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (மொ.உ.உ.) 52 சதவீத்திற்குப் பங்களிப்புச் செலுத்துகின்றது. நு.சி.ந.தொ.மு.களானவை மிகவும் பரந்த மூலதன அபிவிருத்தியினைத் தரமுயர்த்துவதுடன் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் இளைஞர், யுவதிகளின் பங்குபற்றலில் அதிக சந்தர்ப்பங்களை எற்பாடுசெய்கின்றது.

நுண், சிறிய, நடுத்தர அளவு தொழில்முயற்சிகள் (நு.சி.ந.தொ.மு) இலங்கையின் வளர்ச்சியினைத் தரமுயர்த்துவதிலும் சமூக அபிவிருத்தியிலும் பிரமானமான மூலோபாயத் துறையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நு.சி.ந.தொ.மு.களானவை, ஆண்டாண்டு காலமாக தொழில்வாய்ப்புகளை வழங்கல், வருமானம் உருவாக்கல், வறுமை ஒழிப்பு மற்றும் பிராந்திய அபிவிருத்தி ஆகியவற்றில் பாரிய வளங்களை உருவாக்குவதில் பரந்த அளவில் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. நு.சி.ந.தொ.மு.களானவை, விவசாயம், சுரங்கத்தொழில் உற்பத்திசெய்தல், நிருமாணிப்பு மற்றும் சேவைத்துறைக் கைத்தொழில்கள் ஆகிய அகன்ற பொருளாதாரப் பரப்புகளான நு.சி.ந.தொ.மு. களினை பரந்தளவில் உள்ளடக்குவதாகக் காணப்படுகின்றது.

நு.சி.ந.தொ.மு.களின் வளர்ச்சியும், விரிவாக்கமும், உற்பத்தி மற்றும் காரணிச் சந்தை மற்றும் அவர்களால் தொழிற்படுத்தப்படும் ஒழுங்கமைப்பான முறைமைகளிலிருந்து வரும் பிரச்சினைகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன. இந்தப் பிரச்சினைகள் மிகவும் அகன்ற பகுதிகளான நிதிவசதிக்கான வழி, பௌதீக உட்கட்டமைப்பு வசதி, தொழில்நுட்பவியலின் அளவு, ஒழுங்குபடுத்தல் சட்டக வேலை, தகவல் மற்றும் ஆலோசனைக்கான வழி, சந்தைகளுக்கான வழி, வியாபார அபிவிருத்திச் சேவைகள், கைத்தொழில்உறவு மற்றும் தொழில் சட்டவாக்கம், புலமைச்சொத்து உரிமை, தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவத் திறன், தொடர்பு கொள்ளும் முறை, சுற்றாடல் பிரச்சினைகள் ஆகியவற்றிற்குள் விழுகின்றது.

தொழில்முயற்சிகளில் போதிய அறிவின்மை, சந்தைப்படுத்தல் தொழில்நுட்பம் மற்றும் நிதி முகாமைத்துவம் ஆகிய மேற்படி பிரச்சினைகளை தொழில்முயற்சியாளர்கள் கொண்டுள்ளார்கள் என்பதனை தே.தொ.மு.அ.வானது அடையாளம் கண்டுள்ளது. மேலும் அவர்கள் வியாபாரங் களைத் தொடங்கவோ விரிவாக்கவோ நிதிசார் தடைகளுக்கு முகம் கொடுக்கின்றார்கள் என்பதனையும் தே.தொ.மு.அ.வானது அடையாளம் கண்டுள்ளது. தே.தொ.மு.அ.வினது அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பிராந்திய மட்டத்தில் பணிபுரிவதுடன் மேற்படி பிரச்சினைகளுக்கு தீர்வுகள் தேவைப்படும் தொழில்முயற்சிகளை அவர்கள் அடையாளம் காண்கின்றனர்.

எனவே தே.தொ.மு.அ.வானது குறுகியகால இயலுமை அபிவிருத்திப் பயிற்சியளித்தல், நிதிசார் உதவிகள், சந்தை வசதிகள் மற்றும் ஏனைய தொழில்முயற்சியாளர் அபிவிருத்திச்சேவைகளை அமுலாக்குவதுடன் எல்லா மாவட்டங்களிலுமுள்ள பிராந்திய மட்டத்திலுள்ள தொழில்முயற்சியாளர்களுக்காகப் பின்தொடரும் சேவையினையும் அமுலாக்குகின்றது. தே.தொ.மு.அ.வானது அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடமிருந்து செயற்றிட்ட முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்வதுடன் பிரதேசசெயலாளர்கள் மாவட்டச் செயலாளர்களினால் சமர்ப்பிக்கப்படும் செயற்றிட்ட முன்மொழிவுகளை அமுலாக்குவதற்கு வேண்டிய நிதிசார் ஒத்துழைப்புக்களை எற்பாடுசெய்கின்றது.

2020ஆம் ஆண்டில் தே.தொ.மு.அ.வானது 4855 தொழில்முயற்சிகளுக்கு பிரதேச சபைகளினூடாகப் பயிற்சியளித்துள்ளது. தே.தொ.மு.அ.வானது, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஒத்துழைப்புடன் கொழும்பிலுள்ள (தெமட்டகொட) 30 புதிய தொழில்முயற்சிகளுக்கு பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்தியதுடன் பெண்கள் தொழில் முயற்சியாளர்களுக்கு (200 தொழில்முயற்சியாளர்கள்), தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்தியது.

தொழில்நுட்பப் பயிற்சியளித்தல்

நிகழ்ச்சித்திட்டம் 04 - தொகுதி அல்லது துறைவாரியான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.

நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சியாளர்கள் (நு.சி.ந.தொ.மு) இலங்கையிலுள்ள பொருளாதார வளர்ச்சிக்கும் பல்லினத்தன்மைக்கும் ஒரு சாரதித்துவமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். எப்படியாயினும் இலங்கையிலுள்ள நு.சி.ந.தொ.மு.களானவை, பெறுமதிச் சங்கிலியுடன் சேர்ந்தாற்போல் சுதந்திரமாகக் காணப்படவும் வேலைசெய்யவும் கூடியவர்களாக உள்ளனர். நு.சி.ந.தொ.மு.கள் தனித்தனியாக போட்டிச்சந்தை அழுத்தங்களுக்கு முகம்கொடுத்து தொடர்ந்தேச்சையாக கடமையாற்றத்தக்கதாக அவர்களின் இயலுமையை விருத்திசெய்யமுடியாது. இந்தப் பிரச்சினையினைச் சமாளித்து முன்னேற, நு.சி.ந.தொ.மு.களுக்கு தொகுதிவாரியான துறை அபிவிருத்தியானது நன்கு ஆராய்ச்சிசெய்யப்பட வேண்டும்.

தொகுதிகளை அல்லது துறைகளை அடிப்படையாகக்கொண்ட அணுகுமுறையானது பல்வேறு நன்மைகளைக் கொண்டது. நு.சி.ந.தொ.மு.களானவை, பயிற்சியளித்தல் மற்றும் தொழில்நுட்பவியல் கண்டுபிடிப்புகள், நிதியளித்தலுக்கான இலகுவான வழிமுறைகள் மற்றும் பாரிய நிறுவனரீதியான ஒத்துழைப்பினை இலகுவில் பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது. மேலும், இதன்மூலம் பல்வேறு இடங்களிலும் தனித்தனியான தொழில்முயற்சிகளினால் வியாபார அபிவிருத்திச் சேவைகளை வழங்குவதிலும் பார்க்க, மொத்தக் தொகுதியாகவுள்ள தொழில்முயற்சிகளினால் வியாபார அவிருத்திச்சேவைகளை (வி.அ.சே) அரசாங்கத்திற்கும் ஏனைய ஒத்துழைப்பு முகமைகளுக்கும் மிகவும் குறைந்த கிரய அடிப்படையில் வழங்கக்கூடியதாக இருக்கின்றது.

இலக்கிலுள்ள குழுக்களுக்கான இயலுமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.

1. இலக்குவைக்கப்பட்ட குழுக்களுக்கென தொழில் முயற்சியாண்மை மற்றும் இயலுமை அபிவிருத்தி பயிற்சியளித்தலினை எற்பாடுசெய்தல்.
2. தொழில்நுட்பவியல் முன்னேற்ற நிகழ்ச்சித்திட்டம்.
3. வியாபாரத் திட்டமிடல், நிதியுதவி, சந்தை அபிவிருத்தி ஆலோசனை வழங்கல் ஆகியன.

தே.தொ.மு.அ.வின் சட்டங்களுக்கும், கூட்டுத்திட்டத்திற்கும் அமைய, தே.தொ.மு.அ.வானது இலங்கையில் அடையாளம் காணப்பட்ட தொகுதி அல்லது துறைகளுக்காக, 2020ஆம் ஆண்டில் தொகுதி அபிவிருத்தி நிகழ்சித்திட்டத்தினை அமுலாக்கியது.

1. புகையூட்டப்பட்ட கருவாடு:- 'ஓவன்' வசதிகளை (அம்பாறை மாவட்டம்) எற்பாடுசெய்து கொடுத்ததன் மூலம் நல்ல தண்ணீர் கருவாடு உற்பத்திகளுக்கு அதிகாரமளித்தல்.

2. மரமுந்திரிகை (மட்டக்களப்பு):- தடைகளைக் குறைத்தல் புதிய உற்பத்தி தொழில்நுட்பத்தினை வழங்கல், உபகரணப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்தல், மற்றும் கழிவாதலை குறைத்தல் ஊடாக தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தினை அதிகரித்தல் மூலம் இந்தத் துறையினை அபிவிருத்திசெய்தல்.

3. அந்தூரியம் (மொனறாகலை மாவட்டம்):- தொழிற்சாலைத் தேவைப்பாடுகளுக்கேற்றவாறு இந்தத் துறைக்கு புதிதாக முன்வருவோரினை அபிவிருத்திசெய்து அவர்களை அறிமுகம்செய்வதன் மூலம் குறித்த துறையினை விரிவடையச்செய்தல்.

4. 'ஜப்பான் ஜபாரா' செயற்றிட்டம் (குருணாகல் மாவட்டம்):- 'ஜப்பான் ஜபாரா' செய்கையினைப் பயன்படுத்தி சுற்றாடல் சிநேகபூர்வ உற்பத்தியினை ஊக்குவித்தல்.

5. சப்பாத்து உற்பத்தி (கொழும்பு மத்தி):- தொழில்வாய்ப்புகளை உருவாக்கல்.

ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள்:-
மொறட்டுவ தளபாடத்தொகுதி:

குழுக்கூட்டம் நடைபெற்று பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டன (கௌரவ அமைச்சர் சமுகமளித்திருந்தார்.)

ஆடைத்தொழிற்சாலைத்துறை: வாங்குவோர், விற்போர் குழுக்கூட்டமானது, ஆடைத்

தொழிற்சாலைத் தொழில் முயற்சியாளர்களுக்காக நடாத்தப்பட்டதுடன், மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. ஆரம்பப் பேச்சுவார்த்தையானது பமுனுவவிலுள்ள ஆடைத்துறையில் ஈடுபட்டுள்ள தொழில்முயற்சியாளர்களுடன் நடைபெற்றது.

சாம்பிராணிக்குச்சி: வியாபாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான விடயங்கள் கௌரவ பிரதமமந்திரி அவர்கள் சமுகமளித்திருந்த நிலையில் கலந்துரையாடப்பட்டன.

நிகழ்ச்சித்திட்டம் 05 - தொழில்முயற்சிக் குழுக்கள்:

இலங்கையில் அதிக எண்ணிக்கையானவர்கள் நுண், சிறிய, நடுத்தர அளவு தொழில் முயற்சிகளுக்காக (நு.சி.ந.தொ.மு) வேலைசெய்கின்றனர். எனவே இந்த தொழில்முயற்சியாளர்களுக்கு ஊக்கமூட்டக்கூடிய மற்றும் சக்திவாய்ந்த வியாபாரச் சுற்றாடலினை உருவாக்குவது முக்கியமாகும். இதனை அடிப்படையாகக்கொண்டு, உள்ளூர் பொருளாதார அபிவிருத்தியானது (உ.பொ.அ), உள்ளூர் அமைப்பின்படியான மரபுரீதியான அபிவிருத்தி மூலோபாயங்களுக்கு ஒரு கவர்ச்சிகரமான மாற்றீடாக அமையும்.

உ.பொ.அ. வானது அபிவிருத்திக்கு ஒரு பங்குபற்றக்கூடிய அணுகுமுறையாகும். ஒரு அகன்ற பரப்பளவிலான உள்ளூர் முதலீட்டாளர்கள், உள்ளூர் பொருளாதார வாய்ப்புகளினை உணர்ந்து பிராந்திய மற்றும் தேசிய அரசாங்க, சர்வதேச நிறுவனங்கள் ஆகியவற்றுடன் சேர்ந்ததாக வேலைசெய்கின்றனர். அதன் பங்குபற்றல் மீதான கண்காணிப்பு மூலமாக உ.பொ.அ. வானது உள்ளூர் தனியார் மற்றும் பொதுத்துறை முதலீட்டாளர்களுக்கும், அதேபோல சமூக மற்றும் அரசியல் குழுக்களுக்கிடையில் சந்தர்ப்பங்களையும், பங்காண்மையினையும் உருவாக்குகின்றது.

அரசாங்க அதிகாரசபைகள், தனியார்துறை நிறுவனங்கள் மற்றும் அரசாங்க வியாபார அபிவிருத்திச்சேவை வழங்குநர் மற்றும் வியாபாரத்துறையினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கிய தொழில் முயற்சியாளர்களை ஒன்றாகப் பிரதிநிதித்துவம் செய்யும் தொழில் முயற்சிக் குழுக்கள் மற்றும் உள்ளூர் தொழில்முயற்சிக் குழுக்களுக்காக பொது மற்றும் தனியார் சம்பாஷனைகளை உருவாக்கல்.

தேசிய தொழில்முயற்சிக் குழு:

இது எல்லா தேசிய மாவட்ட அரசாங்க மற்றும் தனியார்துறை முதலீட்டாளர்கள் மற்றும் முக்கிய தொழில்முயற்சியாளர்களைப் பிர்திநிதித்துவப் படுத்துவதுடன் பொருத்தமான

அமைச்சிலுள்ள அமைச்சரினால் தலைமைவகிக்கப்படும்.

மாவட்ட தொழில்முயற்சிக் குழு:

இது எல்லா மாவட்ட அல்லது மாகாண மட்ட அரசாங்க மற்றும் தனியார்துறை முதலீட்டாளர்கள் மற்றும் முக்கிய தொழில் முயற்சியாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் இது மாவட்டச் செயலாளர்களினால் தலைமைவகிக்கப்படும். மாவட்டச் செயலாளர், பொருத்தமான முதலீட்டாளர்களை இந்தக் குழுவிற்று அழைக்கத் தத்துவமுடையவராவார்.

பிரிவுத் தொழில்முயற்சிக் குழு:

இது பிரதேச மட்ட அரசாங்க மற்றும் தனியார் துறை முதலீட்டாளர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதுடன் இது பிரதேச செயலாளரினால் தலைமைவகிக்கப்படும். பிரதேச செயலாளர் பொருத்தமான முதலீட்டாளர்களை இநதக் குழுக்கூட்டத்திற்கு அழைக்கத் தத்துவமுடையவராவார்.

தொழில்முயற்சிக் குழுவின் நோக்கமும் பங்கும் பின்வருமாறு:

இந்தத் தொழில்முயற்சிக்குழுவின் பரந்துபட்ட நோக்கமானது, உள்ளூர் பொருளாதார அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் நு.சி.ந.தொ.மு அபிவிருத்திகளினூடாக பங்களிப்பதாகும். இதன்படி தொழில்முயற்சிக்குழுவின் பங்களிப்பானது, இந்த நோக்கத்தை அடைவதற்கான சம்பாஷனைக் குழுவிற்கு ஏற்பாட்டாளராகவும் நடாத்துநராகவும் இருப்பதாகும். இன்னும் விசேடமாக தொழில்முயற்சிக்குழுவின் பங்களிப்பானது –

1. நு.சி.ந.தொ.மு. களினைத் தரமுயர்த்துவதற்கு அங்கத்தவர்களுக்கிடையில் ஒழுங்கான ஆலோசனைச் சேவைகளையும் சம்பாஷனைகளையும் வைத்திருத்தல்.
2. நு.சி.ந.தொ.மு. அபிவிருத்தி சம்பந்தப்பட்ட எல்லா முதலீட்டாளர்களுக்குமிடையில் வலைப்பின்னல் ஒன்றை வைத்திருப்பது.
3. நு.சி.ந.தொ.மு. துறையிலுள்ளள பிரச்சினைகளை வெளிப்படுத்துவதுடன் திட்டமிடப்பட்ட தீர்வுக்குப் பங்களிப்புச் செய்வது.
4. நு.சி.ந.தொ.மு. சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் தேசிய மட்டத்திற்குக் கொண்டுவருவதற்கு மதியுரை மற்றும் ஆதரவுபெறுவதற்கு வசதிசெய்தல்.
5. பிராந்தியத்திலுள்ள நு.சி.ந.தொ.மு அபிவிருத்திகளுடன் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளுக்கு சிபார்சுகள் செய்வதும், தரமுயர்த்துவதும், சில விடயங்களில் ஒருங்கிணைப்புச் செய்வதும்.

6. தேசிய மற்றும் உள்ளூராட்சி அரசாங்க நிறுவனங்களுடைய தேசிய மாவட்ட மற்றும் பிரதேச அபிவிருத்திகளுக்குப் பங்களிப்புச்செய்வது.
7. பிரதேச வளங்களின் உச்சப் பயன்பாட்டிற்குத் தரமுயர்த்தல்.
8. வணிகர்கழகத்தினூடாக முதலீடு மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பிற்கு வசதிசெய்வது.
9. அரசாங்க மற்றும் நன்கொடையாளர்களினால் அனுசரணை செய்யப்படும் தேவைக்கும், அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்குமிடையில் ஒரு இணைப்புச் சங்கிலியாக இருத்தல்.

அங்கத்தவர்கள்:

தொழில்முயற்சிக்குழுக்களின் அங்கத்தவர்களானவர்கள், எப்படிக் குழுக்களினை வெற்றிகரமாக செயற்படுத்துவது என்பதற்கு மூலகர்த்தாக்களாவர்கள். பொது மற்றும் தனியார்துறை நிறுவனங்கள் மற்றும் அரசுசார்பற்ற நிறுவனங்களின் கலப்பில் ஏதாவது ஒன்று ஆதிக்கம்செலுத்தும் நிலைமையைத் தவிர்ப்பதற்காக இத்தகைய அங்கத்தவர்களின் கூட்டானது சமமான நிலையில் பேணப்படுவது மிக முக்கியமாகும். அங்கத்தவர்கள் தங்களின் நிறுவனங்களிலிருந்து தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரத்தைக் கொண்டிருப்பார்களானால் இந்தக் குழுவானது மிகவும் வினைத்திறமையாகவும் வெற்றிகரமானதாகவும் காணப்படும். இந்தக் கூட்டானது பின்வருமாறு காணப்படுவதற்குச் சிபார்சுசெய்யப்படுகின்றது. அரசாங்க வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குவோர் (அமைச்சுக்கள், திணைக்களங்கள், அமைச்சுக்களின் கீழ் வரும் நிறுவனங்கள், தனியார் வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்கள், மாவட்ட அல்லது மாகாண வணிகர் மற்றும் கைத்தொழில் கழகங்கள், நு.சி.ந.தொ.மு. சங்கங்கள் மற்றும் ஒவ்வொரு வியாபாரத் துறையிலுமிருந்தான முக்கிய முதலீட்டாளர்கள்.

குழுவினைத் தொழிற்படவைப்பது எப்படி?

நு.சி.ந.தொ.மு. களின் மீதான பொது தனியார்துறை சம்பாஷனையை வெற்றிகரமாகப் பேணுவதற்கு தொழில்முயற்சிக் குழுக்கள் ஒழுங்காகக் கூடவேண்டும். மேலும் நாட்டின் உச்ச சாத்தியமான மட்டத்திலான ஒத்துழைப்பினையும் இந்தக் குழுக்களின் தீர்மானத்திளால் நிச்சயிக்கப்பட வேண்டும். தொழில்முயற்சிக்குழுக்களின் செயன்முறை ஒழுங்குகளுடன் அதிகாரத்தில் இருப்பவர் உதவுவதற்காக ஒரு செயலாளர் நியமிக்கப்படவேண்டும். மேலும் கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களினை அமுலாக்குவதறகாக, அதனை அமுலாக்கவோ அல்லது ஒருங்கிணைப்பதற்கோ பல்வேறு விதமான குழு அங்கத்தவர்கள் நியமிக்கப்படுவதென்பது மிகவும் கடினமாகும். இந்தவகையான ஒத்துழைப்பு

வழங்குமுகமாக உப-குழுக்களையோ, வேலைக்கென ஒரு பிரிவினரையோ தாபிப்பதனை குழுவானது தெரிவுசெய்யமுடியும். கைத்தொழில் அமைச்சின்கீழ்வரும் தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையானது (தே.தொ.மு.அ) இந்த நிகழ்ச்சித்திட்டத்தினை ஒருங்கிணைப்புச்செய்யும்.

2020ஆம் ஆண்டுவரை, மாவட்டத் தொழில்முயற்சிக் குழுக்களானவை, 14 மாவட்டங்களில் தாபிக்கப்பட்டதுடன், அங்கு 07 மாவட்டங்களில் கூட்டங்கள் நடைபெற்றதுடன் (ஜனவரி - டிசம்பர் 2020), பிராந்திய தொழில்முயற்சிக் குழுக்கள் (236 பிரதேசசெயலகங்களில்) தாபிக்கப்பட்டன. தேசிய தொழில்முயற்சிக் குழுக் கூட்டமானது பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சித்திட்டம் 06: பரீட்சித்துப்பார்த்தல் மற்றும் தொழில்நுட்ப கைமாற்று நிலையத்தினைத் தாபித்தல்.

பரீட்சித்துப்பார்த்தல் மற்றும் தொழில்நுட்பவியல் கைமாற்று நிலையமானது (ப.தொ.நு.கை.நி) புதிதாக ஒரு உற்பத்தி அல்லது சேவை வரிசைகளில் ஈடுபடும்போது ஏற்படும் அபாயத்தைக் குறைக்கும் ஒரு நிலையமாகக் காணப்படுவதுடன், முதலிடப்படவுள்ள தொடக்க மூலதனத்தின் அளவை உயர்தொழில்தரப் பின்னணியிலிருந்து குறைக்கக்கூடியதாக உள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தின் நோக்கமானது, அப்பகுதியிலுள்ள நுண் மற்றும் சிறிய கைத்தொழில் சாலைகளுக்கு வசதிகளைச் செய்து கொடுப்பதும், பல்கலைக்கழகங்களிலிருந்து சித்தியடைந்து வெளியேறும் பட்டதாரிகளுக்கு அவர்கள் தங்களின் சுய திடகாத்திரத்திற்கு வளரும்வரை உதவிசெய்து அவர்கள் வியாபாரத்தினைத் தொடங்குவதற்கும் ஆகும்.

தேவைப்படும் புதுமையான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் தேவைகளுடன் தொழிலைத் தொடங்குவதற்கு பரீட்சித்துப்பார்த்தல் மற்றும் தொழில்நுட்பவியல் கைமாற்று நிலையமானது வசதிசெய்து கொடுக்கின்றது.

2020ஆம் ஆண்டில் தே.தொ.அ.அ. வானது ஒவ்வொரு மாகாணத்திலும் பரீட்சித்துப்பார்த்தல் நிலையங்களைத் தாபிக்க முன்மொழிவினைத் தயாரித்தது.

நிகழ்ச்சித்திட்டம் 07 - ‘உபாதிதாரி வையவசாயக உதானய’ நிகழ்ச்சித்திட்டம்.

புள்ளிவிபரங்களின்படி 2013ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பினை வழங்கி பங்களிப்புச் செய்ததன்மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு (மொ.உ.உ.) சிறிய நடுத்தர தொழில்முயற்சியாளர்களின் (நு.சிநதொமு) பங்களிப்பானது 40 சதவீதமாகுமென்பதுடன்,

2014ஆம் ஆண்டில் இதே மொ.உ.உ.இன் பங்களிப்பானது 52 சதவீதமாகும். விசேடமாக சர்வதேச தொழில் தாபனத்திடமிருந்து கிடைத்த புள்ளிவிபரங்களின்படி, வேலையற்ற இளைஞர்களின் எண்ணிக்கையானது அதிகரித்துச்சென்று காணப்பட்டதுடன் இளைஞர்களை தொழில்முயற்சிகளில் ஈடுபடுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கியமையானது, இளைஞர்களின் வேலைவாய்ப்பின்மைப் பிரச்சினைக்கான தீர்வுகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது.

இந்தக் காரணிகளை விளங்கிக்கொண்டு தே.தொ.அ.அ.வானது, பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்கு அவர்களின் இயலுமையை முன்னேற்றுவதன் மூலம் அவர்களை வெற்றிகரமாக தொழில்முயற்சியாளர்களாக அபிவிருத்திசெய்வதற்கும், வியாபார உலகில் சந்தர்ப்பங்களை நோக்கி நடாத்திச்செல்வதற்காக அவர்களை ஊக்குவிப்பதற்குமென ஒரு விசேடத்துவம் மிக்க நிகழ்ச்சித்திட்டத்தினை எடுத்துச்சென்றது

நிகழ்ச்சித்திட்டம் 08 – “உபாதிதாரி வையவசாயக உதானய” நிகழ்ச்சித்திட்டம்.

நு.சி.ந.தொ.மு.களானவை, நாட்டில் காணப்படும் பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டில் தீர்க்கமான வகிபாகத்தைக் கொண்டிருந்ததுடன் வறுமை ஒழிப்பு மற்றும் வேலையில்லாப் பிரச்சினையையும் தீர்ப்பதற்கும் அடையாளம் கண்டுள்ளது. புள்ளிவிபரங்களின்படி 2013ஆம் ஆண்டில் சி.ந.தொ.மு.களானவை, வேலைவாய்ப்பினை வழங்குவதிலும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்குப் (மொ.உ.உ) பங்களிப்பு வழங்குவதிலும் கடினமான ஒரு வ பாகத்தினை கொண்டிருந்ததுடன், நு.சி.ந.தொ.மு.களின் பங்களிப்பானது நாட்டின் மொஉஉ. இன் 40 சதவீதம் என்பதுடன் 2014ஆம் ஆண்டில் இது மொஉஉ. இன் 52 சதவீதமமாகும்.

இந்தக் காரணிகளை விளங்கிக்கொண்டு தே.தொ.மு.அ.வானது பல்கலைக்கழகப் பட்டதாரிகளின் இயலுமையை முன்னேற்றுவதன் மூலம் அவர்களை வெற்றிகரமான தொழில்முயற்சியாளர்களாக அபிவிருத்திசெய்வதற்கும், வியாபார உலகில் சந்தர்ப்பங்களை நோக்கியதாக அவர்களை, வழிநடாத்திச் செல்வதற்குமாக அவர்களை ஊக்குவிப்பதற்கும் ஒரு விசேடத்துவம் மிக்க நிகழ்ச்சித்திட்டத்தினை எடுத்துச்சென்றது.

இந்த தொடக்க நிலையில் மென்மேலும் முன்னேறிச் செல்லக்கூடிய சூழலை உருவாக்குவதற்கு தொழில்முயற்சியாளர் கல்வி மற்றும் மென்பொருள் திறமையின் அபிவிருத்தியையும் நிலைநிறுத்த இன்னும் பலமான திறமையானது தேவைப்படுகின்றது. தே.தொ.மு.அ.வினது பார்வையில் காணப்படுவது என்னவென்றால் பல்கலைக்கழகங்களின் தற்போதைய எடுத்துச்செல்லும் வழிகாட்டிக் கூறானது தொழில்முயற்சியாளர் பட்டதாரிகளை

உருவாக்கத் தீர்க்கமான வகிபாகத்தைக் கொண்டிருக்கு மென்பதுடன், தொழில்முயற்சியாளர் பட்டதாரிகளை உருவாக்குவதன் மூலம் ஏனையோருக்கும் முன்னெடுத்துச்செல்லும் சந்தர்ப்பங்களை உருவாக்கக்கூடிய ஒரு கூறாக இது முன்வரும்.

எனவே, சமூக அழுத்தங்களின் காரணமாக (தொழில் முன்னேற்றத்தில் ஈடுபடுவதற்கான விருப்புரிமை), அத்துடன் ஒரு தொழில்முயற்சியாளராக ஆகுவதனைப் பெறுபேறாகக் கொண்டுவரக்கூடிய நன்மைகள் பற்றிய தெரிந்துகொள்ளலிலான குறைபாடு காரணமாக பட்டதாரிகள் தொழில் முன்னேற்றத்தில் ஈடுபடுவதற்கு விருப்புரிமையைக் கொண்டவர்கள் ஆவார்கள். இதற்குமேல் தொழில்முயற்சியாளர்களுக்கான சந்தர்ப்பம் பற்றிய விழிப்புணர்வின்மை, வியாபார பொறுப்பெடுத்தலில் போதிய அறிவின்மை, தொடக்க முதலீடு நிறுவனங்களில் அபாய ஈடுபாடு ஆகியன பட்டதாரிகளை வியாபாரத்தில் ஈடுபடத் தூண்டாமைக்கான காரணங்களாகும். மேலே கூறப்பட்ட காரணங்களைக் கருத்திற்கொண்டு, தே.தொ.மு.அ.வானது ஒரு பட்டதாரி தொழில்முயற்சியாளர்கள் நிகழ்ச்சித்திட்டத்தினை வடிவமைத்து அறிமுகம் செய்துள்ளது.

விசேட நோக்கங்கள்:

1. வெற்றிகரமான பட்டதாரி தொழில்முயற்சியாளர்களைக் கட்டியெழுப்புதல்.
2. சமூகங்களுக்கு வேலைவாய்ப்புச் சந்தர்ப்பங்களை உருவாக்குதல்.
3. வியாபாரத் துறையினரை நோக்கி இளைஞர் சமூகம் கல்விகற்பதை ஊக்குவித்தல்.

இலக்குவைக்கப்படும் குழு:

அ. பட்டதாரிகளாகவரவுள்ள பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவர்கள்.

ஆ. அண்மைக் காலத்தில் பல்கலைக் கழகங்களைவிட்டு வெளியேறிய பட்டதாரிகள் (5 வருடங்கள் வரையில்) (அண்மைக்காலத்தில் வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் அல்லது வியாபாரத்தில் உள்நுழையத் தீர்மானித்திருப்போர்.)

இ. தொழில்முயற்சியாளராக முன்வரவிருப்பமுடைய பட்டப்பின்படிப்பு மாணவர்கள்.

பாரிய நடவடிக்கைகள்

இலக்குவைக்கப்படும் குழுக்களின் தரவுத்தளத்தினைத் தயாரித்தல்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கான உத்தேச பங்குபற்றுபவர்களின் தரவுத்தளத்தின் தயாரிப்பானது முதலாவது செயற்பாடாகும். பல்கலைக்கழகத்தின் வழிகாட்டல்களை முன்னெடுத்துச்செல்லும் பிரிவானது இந்த நிகழ்சித்திட்டத்திற்கான சாத்தியமான பங்குபற்றுவோரின் தரவுத்தளத்தினைத்

தயாரித்துப்பேணிவரவேண்டும்.

பிரச்சாரம்:

தபால்மூலம் அறிமுகஞ்செய்தல் மற்றும் கல்விச்செயற்பாடுகளின் மூலமாக இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்குப் பிரச்சாரம் செய்தல்.

விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்துதல்:

பட்டதாரிகளாகவரவுள்ள பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவர்களும், அண்மையில் சித்தியடைந்த பட்டதாரிகளும், பட்டப்பின்படிப்பு பட்டதாரி மாணவர்களும் இலக்குக் குழுவாக அடையாளம் காணப்பட்டபோதும், தற்போதைக்கு குறித்த நிகழ்ச்சித்திட்டமானது இறுதியாண்டு மாணவர்களுடனேயே ஆரம்பிக்கப்படுகின்றது. பல்கலைக்கழகங்களுக்கிடையில் தொழில்முயற்சியாண்மைக் கருதுகோளினைப் பிரபல்யப்படுத்தும் நோக்கில் முன்னெடுத்துச்செல்லும் வழிகாட்டல்கூறின் கூட்டுச்சேர்க்கையுடன் இந்த வீப்புணர்வுத் நிகழ்ச்சித்திட்டமானது நடாத்தப்படுகின்றது. இதன் மூலம் மாணவர்கள் நிகழ்சித்திட்டத்திற்குத் தயாராகவுள்ளதுடன், பல்கலைக்கழகச் சுற்றாடலிலான பயிற்சியளித்தல் போன்றவற்றை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பங்களினை வியாபாரத்தில் ஈடுபடுத்தி அதனைத் தங்களின் சுயதேவைக்குத் தீவிரமாகப் பயன்படுத்தி நன்மையடையக்கூடியதாக இருக்கின்றது.

நன்மையடைவோரின் விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ளலும் தெரிவுசெய்தலும்:
விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு அளவைசெய்தல்.

தேவைப்படும் மதிப்பீடும் இயலுமை அபிவிருத்தியும்.
வியாபார தொழில்முயற்சியாண்மை மற்றும் வியாபாரத் திட்டமிடல் பயிற்சியளித்தல்.

நிதியளித்தல்:

இந்தச் செயற்றிட்டங்களானவை இலாபமீட்டக்கூடியவை எனக்கருதி மென்மேலும் நடைமுறைச் சாத்தியமானமுறையில் தயாரிக்கப்பட்டபோதிலும், தேவைப்படும் மூலதனத்தை முழுமையாக நிறைவேற்றறக்கூடியதாக வங்கிகள் கட்னவசதியினை அளிக்கவில்லை. இங்கு முதலீட்டாளர்களின் பங்களிப்பினை வங்கிகள் கோருகின்றன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பங்குபற்றும் பட்டதாரிகள் தேவையான நிதிகளினை ஒழுங்குபடுத்துவதில் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். எனவே தே.தொ.மு.அ.வானது உச்சமட்டமளவில் நிதிவசதிகளை

ஏற்பாடுசெய்கின்றது.

பின்தொடர்தல்:

வியாபாரச்சூழலுக்குப் புதியவர்களாகவுள்ள பட்டதாரி தொழில்முயற்சியாளர்களுக்கு வியாபாரச் சேவை வழங்குநர்களிடமிருந்து ஒத்துழைப்பு வேண்டப்படுகின்றது. இந்த பட்டதாரி தொழில்முயற்சியாளர்களுக்கு உதவுமுகமாக, வியாபாரப்பதிவு, வியாபார முகாமைத்துவம், நிதிசார் பதிவேடுகளை வைத்திருத்தல், பகுப்பாய்வு, தொழில்நுட்பவியல் கைமாற்று மற்றும் திறன் அபிவிருத்தி, நிதியளித்தலுக்கு வசதிசெய்துகொடுத்தல் மற்றும் சந்தைவாய்ப்பிற்கு வழிவகை செய்துகொடுத்தல் ஆகியன மூலமும், சுறுசுறுப்பான பின்தொடர்தல்மூலமும் அவர்களின் வியாபாரத்திற்கு வசதிசெய்து கொடுப்பதில் ஈடுபட்டுள்ள தே.தொ.மு.அ.வினது அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு கிட்டத்தட்ட ஆறுமாதகாலப்பகுதிக்கு அவர்களுக்கான வசதிகளைச் செய்துகொடுப்பதில் பலமான முறையில் அக்கறையுடையவர்களாக இந்த தொழில்முயற்சியாளர்கள் இருக்கவேண்டும். தே.தொ.மு.அ.வானது 2020ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கொடைவழங்கும் விழாவொன்றினை நடாத்தி, 2019ஆம் ஆண்டில் பயிற்சிபெற்ற 132 பட்டதாரிகளுக்கு கொடைகளை வழங்கிவைத்தது.

நிகழ்ச்சித்திட்டம் 08 - பிராந்திய (மாகாண) மற்றும் தேசியமட்ட தொழில்முயற்சியாளர் விருது வழங்கல் விழாக்கள்.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பூரண அறிவுத்திறனுடன் பங்களிப்புச்செய்யும் தொழில்முயற்சியாளர்களை அங்கீகரித்தல், ஊக்குவித்தல் மற்றும் உந்துசக்தியளித்தல் என்ற நோக்கங்களுடன் தொழில்முயற்சியாளர் விருதுவழங்கல் விழாக்களினை, தே.தொ.மு.அ.வானது நடாத்திவருகின்றது. இதன்படி மாவட்டக்குழுக்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் எல்லா மாகாணங்களிலுமாக ஒன்பது விருதுவழங்கும் விழாக்கள் நடாத்தப்படவுள்ளன. மேலும் மாகாண விருதுவழங்கல் விழாக்களில் வெற்றிபெறுவோருக்கு தேசிய மட்ட விருதுவழங்கும் விழாவானது தே.தொ.மு.அ.வினால் நடாத்தப்படவுள்ளது.

இந்த விருதுவழங்கல்களின் நோக்கங்களானவை:-

- பிராந்தியத்திலுள்ள மிகத்திறமையான தொழில்முயற்சியாளர்களினை அங்கீகரித்து விருதுவழங்குவது.
- மாகாணத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு தங்களின் பங்களிப்பினை வழங்கும் தொழில்முயற்சியாளர்களினை ஊக்கமளித்து உற்சாகப்படுத்தல்.
- தங்களின் பொருத்தமான வியாபாரத்துறைகளில் திறமைகளைத் தேடிக்கொள்வதற்கு தொழில்முயற்சியாளர்களைத் தூண்டுதல்.

2020ஆம் ஆண்டில், தே.தொ.மு.அ.வானது ஊவா மாகாணத்தில் பிராந்திய விருது வழங்கல் விழாவினை நடாத்தி அதனைப் பூர்த்திசெய்ததுடன், ஏனைய மாகாணங்களுக்கான பிராந்திய விருதுவழங்கல் விழாவானது கொவிட்-19 காரணமாக, 2021 முதலாம் காலாண்டில் நடாத்தவென அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

நிகழ்ச்சித்திட்டம் 09 – ‘இலங்கையின் உற்பத்தி’ இலச்சினையை ஊக்குவித்தலும், விருது வழங்குதலும்.

உள்நாட்டு வளங்களைப் பாவித்து உள்நாட்டில் அதிக எண்ணிக்கையான வியாபாரங்கள் நடாத்தப்பட்டபோதிலும், இறக்குமதி செய்யப்படும் உற்பத்திகளுடன் ஒப்பிடும்போது உள்நாட்டு உற்பத்திகளுக்குப் போதிய அங்கீகாரம் கிடைக்கக்கூடியதாகவில்லை. எனவே வாடிக்கையாளர்கள் இறக்குமதிசெய்யப்படும் பொருட்களுக்கு முன்னுரிமை வழங்குகின்றனர். இதன்காரணமாக வாடிக்கையாளர்கள் உள்ளூர் உற்பத்திகளிலும்பார்க்க இறக்குமதிசெய்யப்படும் உற்பத்திகள் தரம்வாய்ந்ததென்று நினைப்பதனால் உள்நாட்டு உற்பத்திகள் குறைந்த கேள் வியுடையதாகக் காணப்படுகின்றன.

இந்தக் கருத்தால் தே.தொ.மு.அ.வானது உள்நாட்டில் உற்பத்திசெய்யப்படும் உற்பத்திப் பொருட்களின் தரம்குறித்து ஒரு இலச்சினையை (இலங்கை உற்பத்தி) அறிமுகம்செய்து அதன்மூலம் உள்நாட்டு உற்பத்திப் பொருட்களின் விற்பனையை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

2020ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இலங்கை உற்பத்தி என்னும் இலச்சினையை

தே.தொ.மு.அ.வானது முன்னெடுத்தது. இது 10 தொழில்முயற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் 10 - ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள்.

01. வியாபாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒரு ‘முகப்புத்தக நேரடி நிகழ்ச்சித்திட்டம்’.

02. அழகுக்கலைத்துறை:

வியாபாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இரண்டு குழுக் கூட்டங்கள் (கௌரவ அமைச்சர் மற்றும் தலைவரின் பங்குபற்றலுடன்) நடைபெற்றதுடன், மேன்மை தங்கிய ஜனாதிபதியின் பங்குபற்றலுடன் கலந்துலையாடல் ஒன்றும் நடைபெற்றது. மேலும், தொழில்முயற்சியாண்மை, வரிவிதிப்பு, நிதிமுகாமைத்துவம், மற்றும் பதிவேடுகள் வைத்திருத்தல், இலங்கைத் தரநிர்ணய நிறுவகம் (இ.த.நி.நி) வழிகாட்டல்களுடன் 275 அழகுக்கலை தொழில்முயற்சியாளர்களுக்கு (குருணாகல் மாவட்டம்) விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தினை தே.தொ.மு.அ.வானது நடாத்தியது.

03. கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட தொழில்முயற்சியாளர்களுக்கான (உணவு பதனிடல்) சந்தைத்தொடர்பு நிகழ்ச்சித்திட்டம்.

04. 35

தொழில்முயற்சியாளர்களுக்க (உணவுப்பொருட்கள் மற்றும் ஆயுர்வேத உற்பத்திகள்) 'சன்மிக்' தனியார் நிறுவனத்துடன் சந்தை வாய்ப்புச் செய்து கொடுக்கப்பட்டது.

05. எஸ்.ஈ.டீ.டீ. உடன் (30 தொழில்முயற்சியாளர்களுக்கு) சந்தைத்தொடர்பு நிகழ்ச்சித்திட்டம்.

06. மலேசியன் வியாபாரக் கவுன்சில் கடன்வசதிகளுக்காக (வட்டியில்லை) தொழில்முயற்சியாளர்களைக் கூட்டிணைத்தல்.

07. கொழும்பு நகர மத்தியில் நு.சி.ந.தொ.மு.களுக்கு (80 தொழில்முயற்சியாளர்கள்) விற்பனைச்சாலை வசதிகள் ஒழுங்குசெய்யப்பட்டது.

08 பல்பொருள் அங்காடி மட்டத்தில் தங்களின் உற்பத்திகளை அபிவிருத்தி செய்வதற்கு 23 நுண்மட்ட தொழில்முயற்சியாளர்களுக்குப் பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டம். (தே.தொ.மு.அ. மற்றும் 'கீல்ஸ்' கூட்டான நிகழ்ச்சித்திட்டம்)

09. சோயா பெறுமதிசேர் உற்பத்திகளில் ஈடுபட்டுள்ள தொழில்முயற்சியாளர்களுக்கு சந்தைத்தொடர்பு நிகழ்ச்சித்திட்டம்.

10. அளவீட்டுத் தரவு சேகரிப்பு (அமைச்சு நிகழ்ச்சித்திட்டம் - கொவிட்-19 தாக்கம்):

11. **இறக்குமதிப் பிரதியிடுகை நிகழ்ச்சித்திட்டம்:** துறைசார் தொழில்களின் தராதரத்தினை அடையாளம் காணப் பொருத்தமான முதலீட்டாளர்களுக்கு கூட்டங்கள் நடாத்தப்பட்டன. தும்புத்தடி, சோயா அவரை மற்றும் தேங்காய் எண்ணெய், தீந்தைகள், கோணிப்பை மற்றும் பைகள், செயற்கை மலர்கள், பழம் இலையுட்பட மரங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள், இறப்பரினாலான வாகன உதிரிப்பாகங்கள், சொக்கலேற், குழாய்கள் மற்றும் பொருத்துதல், சிலிப்பர்கள் மற்றும் பாதணிகள், கவரிங் நகைகள் ஆகியன.

12. மானிடவியல் மற்றும் குழுக்கள் (எச்.ஐ): ஊவா மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு தே.தொ.மு.அ. பிரதிநிதிகளுடன் ஒரு மீளாய்வுக்கூட்டமானது, மானிடவியல் மற்றும் குழுக்கள் (எச்.ஐ) இனால் நடாத்தப்பட்டது. (பிராந்திய தொ.மு. குழு, மாவட்ட தொ.மு.குழு). தே.தொ.மு.அ. அலுவலர்களுக்கென சிறிய தொழில்முயற்சிகள்மீது மூன்று பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டன.

மாத்தளை மாவட்டத்திற்கென ஒரு வாசிப்பு பத்திரம் (துண்டுப்பிரசுரம்) தயாரிக்கப்பட்டது. 2000 பிரதிகளிலான வியாபார அபிவிருத்தி விபரக்கொத்து அச்சடிப்பதற்கென உதவிவழங்கப்பட்டதுடன், தே.தொ.மு.அ. வேலையணியின் வினைத்திறனை அதிகரிக்கவென எட்டு (08) ‘லப்ரொப்’ கணனிகள் வழங்கப்பட்டன.

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான விரிவான வருமானக்கூற்று	குறிப்பு	2020	2019
		சுஎ	சுஎ
வருமானங்கள்			
பொது திறைசேரியிலிருந்து மீண்டெழும் மானியங்கள்		25,620,166.00	25,260,257.00
பிற வருமானங்கள்	7	1,663,867.25	549,756.00
ஆண்டுக்கான மூலதன மானியம்	18	25,938,783.00	40,953,786.00
அரச மானியங்களின் இழப்பு	14	2,588,680.00	2,545,873.00
மொத்த வருமானம்		55,811,496.25	69,309,672.00
கழி :- செயற்பாட்டுச் செலவுகள்			
நிர்வாகச் செலவுகள்	8	30,582,420.14	29,499,033.00
நிகழ்ச்சிகளுக்கான செலவீனங்கள்	9	23,046,172.20	37,057,416.00
மொத்த செயற்பாட்டுச் செலவுகள்		53,628,592.34	66,556,449.00
ஆண்டுக்கான தேறிய மிகை.'.(குறை)		**2,182,903.91**	**2,753,223.00**

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று	குறிப்பு	2020	2019
		சுள.	சுள.
சொத்துக்கள்			
நிலையான சொத்துக்கள்			
காணி, கட்டிடம் மற்றும் உபகரணம்	10	12,125,428	5,752,892
நடைமுறை சொத்துக்கள்			
பெறுவனவுகள்	11	261,887	1,754,416
வைப்புக்கள் மற்றும் முற்பணங்கள்	12	11,692,415	89,970,926
முற்கொடுப்பனவுச் செலவுகள்	13	43,454	98,604
பண்டிகைகான முற்பணங்கள்		21,500	24,000
இடர் கடன்		2,006,512	2,232,034
யாத்திரைக்கான முற்பணம்		52,500	
காசு மற்றும் காசுக்கு சமனானவை		4,585,238	351,521
ட.நுஒிசநளள டுவன	22	600	600
மொத்த நடைமுறை சொத்துக்கள்		**18,664,107**	**94,432,101**
சேமிப்புக் கணக்குகள்- பணிக்கொடை		608,702	583,670
மொத்த பிற நடைமுறை சொத்துக்கள்		**608,702**	**583,670**
மொத்த சொத்துக்கள்		**31,398,237**	**100,768,662**

உரிமையாண்மையும் பொறுப்புகளும்

உரிமையாண்மை

திரட்டப்பட்ட மிகைகள்

		6,554,761	6,026,770
மொத்த உரிமையாண்மை		**6,554,761**	**6,026,770**
நடைமுறை அல்லா பொறுப்புக்கள்			
அரசாங்க மானியம்	14	9,271,630	2,899,092
ஓய்வூதிய நன்மை பொறுப்புகள்	15	1,779,934	1,692,735
மொத்த நடைமுறை அல்லா பொறுப்புக்கள்		**11,051,564**	**4,591,826**
நடைமுறை பொறுப்புக்கள்			
நிகழ்ச்சித்திட்டங்களுக்கான மானியம்	16	9,384,721	86,131,768
அட்டுறு செலவுகள்	17	4,407,193	3,831,070
அமைச்சின் நிகழ்ச்சித்திட்டங்கள்	18	-	-
ஆ.ஃ.ளு ருனேீ	18	-	187,228
மொத்த நடைமுறை பொறுப்புக்கள்		**13,791,915**	**90,150,066**
மொத்த உரிமையாண்மையும் பொறுப்புகளும்		**31,398,237**	**100,768,662**

05 தொடக்கம் 19 வரையான குறிப்புகளடங்கிய பக்கங்கள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியாகும்

அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குவதாக நான் உறுதியளிக்கின்றேன்.

……………..
கணக்காளர்

கையொப்பமிட்டது:

…………………..
திரு. லசந்த காரியபெரும
தவிசாளர்.ஃ. பணிப்பாளர் நாயகம்

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரித்து வழங்குவதற்கான முழு பொறுப்பும் பணிப்பாளர் சபையினரையே சாரும்.

பணிப்பாளர் சபையின் சார்பாக அனுமதியளிக்கப்பட்டு ஒப்பமிடப்பட்டது.

…………………..
திரு. பி.ஏ.கே.டபள்யூ.பியந்த
பணிப்பாளர்

………………..
திரு.டி.எம்.ஆர்தென்னக்கோன்
பணிப்பாளர்

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

2020 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான உரிமை மாற்றல் கூற்று

	திரட்டப்பட்ட மிகை சுள.	மொத்தம் சுள.
2019 ஜனவரி 01 ஆம் திகதி உள்ளவாறான மீதி	**49,798,341**	**49,798,341**
வருடத்திற்கான தேறிய மிகை	2,753,223	2,753,223
சீர் செய்யப்பட்ட முற்பண கொடுப்பனவுகள்	(43,997)	(43,997)
சீர் செய்யப்பட்ட டீ. நுஓிசநளள டுவன முதலீடு	(46,450,000)	(46,450,000)
2018 ஆம் வருடம் சீர் செய்யப்பட்ட பெறுமானத்தேய்வு	(30,797)	(30,797)
2019 டிசம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறான மீதி	**6,026,770**	**6,026,770**
ஆண்டிற்கான தேறிய மிகை	2,182,904	2,182,904
முன்னைய வருடத்தின் சீரப்படுத்தல்கள்	(1,654,913)	(1,654,913)
2020 டிசம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறான மீதி	**6,554,761**	**6,554,761**

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No.	විජ්සි/ඩී/එන්ඊඩීඒ/එෆ්ඒ/2020	මබේ අංකය / உமது இல. / Your No.	
දිනය / திகதி / Date	2024 ජනවාරි 17 දින		

සභාපති,

ජාතික ව්‍යවසාය සංවර්ධන අධිකාරිය

ජාතික ව්‍යවසාය සංවර්ධන අධිකාරියේ 2020 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන සහ වෙනත් නෛතික හා නියාමන අවශ්‍යතා පිළිබඳව 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 12 වන වගන්තිය ප්‍රකාරව විගණකාධිපති වාර්තාව.

---

1. මූල්‍ය ප්‍රකාශන

1.1 තත්ත්වාගණනය කළ මතය

ජාතික ව්‍යවසාය සංවර්ධන අධිකාරියේ 2020 දෙසැම්බර් 31 දිනට මූල්‍ය තත්ත්ව ප්‍රකාශනය සහ එදිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ විස්තීරණ ආදායම් ප්‍රකාශනය, හිමිකම් වෙනස්වීමේ ප්‍රකාශනය සහ එදිනෙන් අවසන් වර්ෂය සඳහා මුදල් ප්‍රවාහ ප්‍රකාශනය සහ මූල්‍ය ප්‍රකාශනවලට අදාළ සටහන්, සාරාංශගත වැදගත් ගිණුම්කරණ ප්‍රතිපත්තිවලින් සමන්විත 2020 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154(1) ව්‍යවස්ථාව සමග සංයෝජිතව කියවිය යුතු 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ සහ 1971 අංක 38 දරන මුදල් පනතේ ඇතුළත් විධිවිධාන ප්‍රකාර මාගේ විධාන යටතේ විගණනය කරන ලදි. ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154(6) ව්‍යවස්ථාව ප්‍රකාරව මාගේ වාර්තාව යථා කාලයේදී පාර්ලිමේන්තුවේ සභාගත කරනු ලැබේ.

මාගේ වාර්තාවේ තත්ත්වාගණනය කළ මතය සඳහා පදනම කොටසේ විස්තර කර ඇති කරුණු වලින් වන බලපෑම හැර, අධිකාරියේ මූල්‍ය ප්‍රකාශන තුළින් 2020 දෙසැම්බර් 31 දිනට මූල්‍ය තත්ත්වය සහ එදිනෙන් අවසන් වර්ෂය සඳහා එහි මූල්‍ය ක්‍රියාකාරිත්වය හා මුදල් ප්‍රවාහ ශ්‍රී ලංකා ගිණුම්කරණ ප්‍රමිතිවලට අනුකූලව සත්‍ය හා සාධාරණ තත්ත්වයක් පිළිබිඹු කරන බව මා දරන්නා වූ මතය වේ.

1.2. තත්ත්වාගණනය කළ මතය සඳහා පදනම

(අ) ශ්‍රී ලංකා ගිණුම්කරණ ප්‍රමිත 07 අනුව වක්‍ර ක්‍රමයට අනුව වූ මුදල් ප්‍රවාහ ප්‍රකාශයෙහි මෙහෙයුම් ක්‍රියාකාරකම් ගැලපීම් ලෙස සටහන් කල යුත්තේ, බදු පෙර ලාභය ගණනය කිරීමේදී ගිණුම් ගත කරන ලද මුදලින් සිදු නොවූ ගනුදෙනුය. නමුත් ස්කන්ධය වෙන්වීමේ ප්‍රකාශයෙහි ගලපා ඇති පෙර වර්ෂයේ වැරදි නිවැරදි කිරීම වටිනාකම වූ රු.1,654,913ක් මුදල් ප්‍රවාහ ප්‍රකාශයෙහි ගැලපීම් යටතේ අඩුකර දක්වා තිබුණි. තවද ශ්‍රී ලංකා ගිණුම්කරණ ප්‍රමිත 08 හි 49 ඡේදය අනුව පෙර වර්ෂයට අදාල මෙම වැරදි නිවැරදි කිරීම සම්බන්ධ තොරතුරු මූල්‍ය ප්‍රකාශවල හෙළිදරව් කර නොතිබුණි.

(ආ) ශ්‍රී ලංකා ගිණුම්කරණ ප්‍රමිත 16 හි 34 ඡේදය අනුව දේපළ පිරියත හා උපකරණ වසර 3 කට හෝ 5කට වතාවක් ප්‍රත්‍යාගණනය කල යුතු වුවත් සමාලෝචිත වර්ෂයේ දෙසැම්බර් 31 දිනට රු.24,168,892ක් වූ මෝටර් රථ, රු.1,652,421ක් වූ කාර්යාල උපකරණ, රු.7,166,093ක් වූ කාර්යාල ලිබඩු, රු.5,873,613ක් වූ පරිගණක හා උපාංග හා රු.1,192,332ක් වූ පිරියත හා යන්ත්‍ර සූත්‍ර දිර්ඝ කාලයකින් ප්‍රත්‍යාගණනය කර නොතිබුණි.

(ඇ) ශ්‍රී ලංකා ගිණුම්කරණ ප්‍රමිත 38 අනුව අස්පෘශ්‍ය වත්කම් මූල්‍ය ප්‍රකාශනවල හඳුනාගත යුතු වුවත්. රු.500,000ක් වැයකර ස්ථාපනය කර ඇති ක්ෂුද්‍ර, කුඩා හා මධ්‍ය පරිමාණ ව්‍යවසායක දත්ත පද්ධතිය අස්පෘශ්‍ය වත්කමක් ලෙස හඳුනා නොගෙන වැඩසටහන් වියදම් ලෙස මූල්‍ය ප්‍රකාශන වල දක්වා තිබුණි.

(ඈ) සමාලෝචිත වර්ෂයේදී මිලදී ගත් වටිනාකම් පිළිවෙලින් රු.645,744ක් හා රු.7,737,500ක් වූ කාර්යාල ලිබඩු හා වැබ් පරිගණක යන්ත්‍ර සම්බන්ධයෙන් ක්ෂය ගිණුම්ගත කර නොතිබීම හේතුවෙන් ක්ෂය වියදම හා ක්ෂය වෙන්කිරීම් පිළිවෙලින් රු.64,574කින් හා රු.1,934,375කින් ඌනගණනය වී තිබුණි.

ශ්‍රී ලංකා විගණන ප්‍රමිතිවලට (ශ්‍රී.ලං.වි.ප්‍ර) අනුකූලව මා විගණනය සිදු කරන ලදී. මෙම විගණන ප්‍රමිති යටතේ වූ මාගේ වගකීම, මෙම වාර්තාවේ මූල්‍ය ප්‍රකාශන විගණනය සම්බන්ධයෙන් විගණකගේ වගකීම යන කොටසේ තවදුරටත් විස්තර කර ඇත. මාගේ තත්ත්වාගණනය කළ මතය සඳහා පදනමක් සැපයීම උදෙසා මා විසින් ලබාගෙන ඇති විගණන සාක්ෂි ප්‍රමාණවත් සහ උචිත බව මාගේ විශ්වාසයයි.

1.3 මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳ කළමනාකරණයේ සහ පාලනය කරන පාර්ශවයන්ගේ වගකීම

මෙම මූල්‍ය ප්‍රකාශන ශ්‍රී ලංකා ගිණුම්කරණ ප්‍රමිතිවලට අනුකූලව පිළියෙල කිරීම හා සාධාරණ ලෙස ඉදිරිපත් කිරීම සහ වංචා හෝ වැරදි හේතුවෙන් ඇතිවිය හැකි ප්‍රමාණාත්මක සාවද්‍ය ප්‍රකාශයන්ගෙන් තොරව මූල්‍ය ප්‍රකාශන පිළියෙල කිරීමට හැකිවනු පිණිස අවශ්‍ය වන අභ්‍යන්තර පාලනයන් නිරණය කිරීම කළමනාකරණයේ වගකීම වේ.

මූල්‍ය ප්‍රකාශන පිළියෙල කිරීමේදී, අධිකාරිය අඛණ්ඩව පවත්වාගෙන යාමේ හැකියාව නිරණය කිරීම කළමනාකරණයේ වගකීමක් වන අතර, කළමනාකාරිත්වය අධිකාරිය ඈවර කිරීමට අදහස් කරන්නේ නම් හෝ වෙනත් විකල්පයක් නොමැති විටදී මෙහෙයුම් නැවැත්වීමට කටයුතු කරන්නේ නම් හැර අඛණ්ඩ පැවැත්මේ පදනම මත ගිණුම් තැබීම හා අධිකාරියේ අඛණ්ඩ පැවැත්මට අදාළ කරුණු අනාවරණය කිරීමද කළමනාකරණයේ වගකීමකි.

අධිකාරියේ මූල්‍ය වාර්තාකරණ ක්‍රියාවලිය සම්බන්ධව පරීක්ෂා කිරීමේ වගකීම, පාලනය කරන පාර්ශවයන් විසින් දරනු ලබයි.

2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 16 (1) උප වගන්තිය ප්‍රකාරව, අධිකාරියේ වාර්ෂික සහ කාලීන මූල්‍ය ප්‍රකාශන පිළියෙල කිරීමට හැකිවන පරිදි ස්වකීය ආදායම්, වියදම්, වත්කම් හා බැරකම් පිළිබඳ නිසි පරිදි පොත්පත් හා වාර්තා පවත්වාගෙන යා යුතුය.

1.4 මූල්‍ය ප්‍රකාශන විගණනය සම්බන්ධයෙන් විගණකගේ වගකීම

සමස්තයක් ලෙස මූල්‍ය ප්‍රකාශන, වංචා සහ වැරදි නිසා ඇතිවන ප්‍රමාණාත්මක සාවද්‍ය ප්‍රකාශනයන්ගෙන් තොර බවට සාධාරණ තහවුරුවක් ලබාදීම සහ මාගේ මතය ඇතුළත් විගණන වාර්තාව නිකුත් කිරීම මාගේ අරමුණ වේ. සාධාරණ සහතිකවීම උසස් මට්ටමේ සහතිකවීමක් වන නමුත්, ශ්‍රී ලංකා විගණන ප්‍රමිති ප්‍රකාරව විගණනය සිදු කිරීමේදී එය සැමවිටම ප්‍රමාණාත්මක සාවද්‍ය ප්‍රකාශනයන් අනාවරණය කරගන්නා බවට වන තහවුරු කිරීමක් නොවනු ඇත. වංචා සහ වැරදි තනි හෝ සාමූහික ලෙස බලපෑම නිසා ප්‍රමාණාත්මක සාවද්‍ය ප්‍රකාශනයන් ඇතිවිය හැකි අතර, එහි ප්‍රමාණාත්මකභාවය මෙම මූල්‍ය ප්‍රකාශන පදනම් කරගනිමින් පරිශීලකයන් විසින් ගනු ලබන ආර්ථික තීරණ කෙරෙහි වන බලපෑම මත රඳා පවතී.

ශ්‍රී ලංකා විගණන ප්‍රමිති ප්‍රකාරව විගණනයේ කොටසක් ලෙස මා විසින් විගණනයේදී වෘත්තිය විනිශ්චය සහ වෘත්තිය සැකමුසුබවින් යුතුව ක්‍රියාකරන ලදී. මා විසින් තව දුරටත්,

- ප්‍රකාශ කරන ලද විගණන මතයට පදනමක් සපයා ගැනීමේදී වංචා හෝ වැරදි හේතුවෙන් මූල්‍ය ප්‍රකාශනවල ඇති විය හැකි ප්‍රමාණාත්මක සාවද්‍ය ප්‍රකාශනයන් ඇතිවීමේ අවදානම් හඳුනාගැනීම හා තක්සේරු කිරීම සඳහා අවස්ථාවෝචිතව උචිත

විගණන පරිපාටි සැලසුම් කර ක්‍රියාත්මක කරන ලදී. වරදවා දැක්වීම හේතුවෙන් සිදුවන ප්‍රමාණාත්මක සාවද්‍ය ප්‍රකාශනයන්ගෙන් සිදුවන බලපෑමට වඩා වංචාවකින් සිදු වන්නා වූ බලපෑම ප්‍රබල වන්නේ ඒවා දුස්සන්ධානයෙන්, ව්‍යාජ ලේඛන සැකසීමෙන්, චේතනාන්විත මගහැරීමෙන්, වරදවා දැක්වීමෙන් හෝ අභ්‍යන්තර පාලනයන් මගහැරීමෙන් වැනි හේතු නිසා වන බැවිනි.

- අභ්‍යන්තර පාලනයේ සඵලදායිත්වය පිළිබඳ මතයක් ප්‍රකාශ කිරීමේ අදහසින් නොවුවද, අවස්ථාවෝචිතව උචිත විගණන පටිපාටි සැලසුම් කිරීම පිණිස අභ්‍යන්තර පාලනය පිළිබඳව අවබෝධයක් ලබා ගන්නා ලදී.

- භාවිතා කරන ලද ගිණුම්කරණ ප්‍රතිපත්තිවල උචිතභාවය, ගිණුම්කරණ ඇස්තමේන්තුවල සාධාරණත්වය සහ කළමනාකරණය විසින් කරන ලද සම්බන්ධිත හෙළිදරව් කිරීම් අගයන ලදී.

- සිද්ධීන් හෝ තත්ත්වයන් හේතුවෙන් අධිකාරියේ අඛණ්ඩ පැවැත්ම පිළිබඳ ප්‍රමාණාත්මක අවිනිශ්චිතතාවයක් තිබේද යන්න සම්බන්ධයෙන් ලබාගත් විගණන සාක්ෂි මත පදනම්ව ගිණුම්කරණය සඳහා ආයතනයේ අඛණ්ඩ පැවැත්ම පිළිබඳ පදනම යොදා ගැනීමේ අදාලත්වය තීරණය කරන ලදී. ප්‍රමාණවත් අවිනිශ්චිතතාවයක් ඇති බවට මා නිගමනය කරන්නේ නම් මූල්‍ය ප්‍රකාශනවල ඒ සම්බන්ධයෙන් වූ හෙළිදරව්කිරීම් වලට මාගේ විගණන වාර්තාවේ අවධානය යොමු කළ යුතු අතර, එම හෙළිදරව්කිරීම් ප්‍රමාණවත් නොවන්නේ නම් මාගේ මතය විකරණය කළ යුතුය. කෙසේ වුවද, අනාගත සිද්ධීන් හෝ තත්ත්වයන් මත අඛණ්ඩ පැවැත්ම අවසන් වීමට හැකිය.

- මූල්‍ය ප්‍රකාශනවල, ව්‍යුහය සහ අන්තර්ගතය සඳහා පාදක වූ ගනුදෙනු හා සිද්ධීන් උචිත හා සාධාරණව ඇතුලත් වී ඇති බව සහ හෙළිදරව් කිරීම් ඇතුළත් මූල්‍ය ප්‍රකාශනවල සමස්ථ ඉදිරිපත් කිරීම අගයන ලදී.

මාගේ විගණනය තුළදී හඳුනාගත් වැදගත් විගණන සොයාගැනීම්, ප්‍රධාන අභ්‍යන්තර පාලන දුර්වලතා හා අනෙකුත් කරුණු පිළිබඳව පාලනය කරනු ලබන පාර්ශවයන් දැනුවත් කරමි.

2. වෙනත් නෛතික හා නියාමන අවශ්‍යතා පිළිබඳ වාර්තාව

2.1 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ පහත සඳහන් අවශ්‍යතාවයන් සම්බන්ධයෙන් විශේෂ ප්‍රතිපාදන ඇතුළත් වේ.

2.1.1 මාගේ වාර්තාවේ තත්ත්වාගණනය කළ මතය සඳහා පදනම කොටසේ විස්තර කර ඇති කරුණු වලින් වන බලපෑම හැර, 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 12 (අ) වගන්තියේ සඳහන් අවශ්‍යතාවන් අනුව, විගණනය සඳහා අවශ්‍ය සියලු තොරතුරු සහ පැහැදිලි කිරීම් මා විසින් ලබාගන්නා ලද අතර, මාගේ පරීක්ෂණයෙන් පෙනී යන ආකාරයට නිසි මූල්‍ය වාර්තා අධිකාරිය පවත්වාගෙන ගොස් තිබුණි.

2.1.2 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 6 (1) (ඇ) (iii) වගන්තියේ සඳහන් අවශ්‍යතාවය අනුව අධිකාරියේ මූල්‍ය ප්‍රකාශන ඉකුත් වර්ෂය සමඟ අනුරූප වේ.

2.1.3 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 6 (1) (ඇ) (iv) වගන්තියේ සඳහන් අවශ්‍යතාවය අනුව ඉකුත් වර්ෂයේදී මා විසින් සිදුකරන ලද නිර්දේශයන් ඉදිරිපත් කරන ලද මූල්‍ය ප්‍රකාශනවල ඇතුළත්ව ඇත.

2.2 අනුගමනය කරන ලද ක්‍රියාමාර්ග සහ ලබා ගන්නා ලද සාක්ෂි මත හා ප්‍රමාණාත්මක කරුණුවලට සීමා කිරීම තුළ, පහත සඳහන් ප්‍රකාශ කිරීමට තරම් කිසිවක් මාගේ අවධානයට ලක් නොවිය.

2.2.1 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 12 (ඇ) වගන්තියේ සඳහන් අවශ්‍යතාවය අනුව අධිකාරියේ පාලක මණ්ඩලයේ යම් සාමාජිකයෙකුට අධිකාරිය සම්බන්ධවී යම් ගිවිසුමක් සම්බන්ධයෙන් සෘජුව හෝ අන්‍යාකාරයකින් සාමාන්‍ය ව්‍යාපාරික තත්වයෙන් බැහැරව සම්බන්ධයක් ඇති බව.

2.2.2 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 12 (ඊ) වගන්තියේ සඳහන් අවශ්‍යතාවය අනුව පහත සඳහන් නිරීක්ෂණ හැර යම් අදාළ ලිඛිත නීතියකට හෝ අධිකාරියේ පාලක මණ්ඩලය විසින් නිකුත් කරන ලද වෙනත් පොදු හෝ විශේෂ විධානවලට අනුකූල නොවන ලෙස ක්‍රියා කර ඇති බව.

නීති, රීති, විධානයට යොමුව	නිරීක්ෂණ
(අ) 2006 අංක 17 දරන ජාතික ව්‍යවසාය සංවර්ධන අධිකාරි පනත	
(i) 13 (ආ)	විදේශ වෙළෙඳපලවල් ජයග්‍රහණය කිරීමට හැකි දේශීය ව්‍යවසායන් ජාත්‍යන්තරකරණය කිරීමේ අරමුණින් ව්‍යවසායන් ශ්‍රී ලංකාවෙන් පිට පිහිටුවීම සහ ක්‍රියාත්මක කිරීම උනන්දු කරවීම සඳහා දිරි ගැන්වීම සඳහා කටයුතු කර නොතිබුණි.

(ii) 13 (ඐ)	තාක්ෂණික දියුණුව, නිෂ්පාදන සංවර්ධනය සහ පේටන්ට් අයිතියේ වාණිජකරණයට අදාල පර්යේෂණ සහ සංවර්ධනය ප්‍රවර්ධනය කිරීම සඳහා තාක්ෂණික සංවර්ධන අරමුදලක් පිහිටුවීමට කටයුතු කර නොතිබුණි.
(ආ)ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ මුදල් රෙගුලාසි සංග්‍රහය	
(i) මුදල් රෙගුලාසි 103, 104 හා 110	(i) 2015 සිට 2019 කාලපරිච්ඡේදය තුල අධිකාරිය සතු රු.99,890ක් වටිනා ලැප්ටොප් පරිගණක දෙකක් හා රු.61,900ක් වටිනා ටැබ් පරිගණක යන්ත්‍ර දෙකක් අස්ථානගත වී තිබුණද ඒ සම්බන්ධයෙන් මුදල් රෙගුලාසි ප්‍රකාරව කටයුතු කිරීම සමාලෝචිත වර්ෂයේදී ද කර නොතිබුණි. (ii) PD-6379 අංක දරන කැබ් රථය සභාපතිවරයා විසින් ධාවනය කරමින් සිටින අවස්ථාවේ ජලය ප්‍රමාණවත්ව නොයෙදීම මත වාහනයේ එන්ජිමට හානි සිදු වී තිබුණි. ඒ පිළිබඳව මුදල රෙගුලාසි ප්‍රකාරව සිද කරන ලද පරීක්ෂණ වාර්තාවට අනුව අළුත්වැඩියාව සඳහා වැය වූ රු.498,110ක මුදල සභාපතිවරයාගෙන් අය කර ගත යුතු බවට නිර්දේශ කර තිබුණි. කෙසේ වුවද එම මුදල අයකර ගැනීමට අධිකාරිය විසින් කටයුතු කර නොතිබුණි.
(ii) මුදල් රෙගුලාසි 371 (5)	අග්‍රිම ලබාදුන් වර්ෂයේ දෙසැම්බර් 31 දින වන විට එම අග්‍රිම පියවිය යුතු නමුත්, 2017 වර්ෂයේ ලබා දුන් රු.352,250ක්, 2018 වර්ෂයේ ලබා දුන් රු.307,010ක්, 2019 වර්ෂයේ ලබා දුන් රු.419,072ක්, හා 2020 වර්ෂයේ ලබා දුන් රු.42,000ක අත්තිකාරම් මුදල්, 2023 දෙසැම්බර් 01 දින වන විටත් නිරවුල් කිරීමට කටයුතු කර නොතිබුණි.
(ඇ) 2003 ජූනි 02 දිනැති අංක පීඊඩී/12 දරන රාජ්‍ය ව්‍යාපාර චක්‍රලේඛයේ 6.5.1 වගන්තිය	ගිණුම් වර්ෂය අවසන් වී දින 60ක් ඇතුළත මූල්‍ය ප්‍රකාශන හා කෙටුම්පත් වාර්ෂික වාර්තාව විගණකාධිපති වෙත ඉදිරිපත් කළයුතු වුවත් 2020 හා 2021 වර්ෂවලට අදාල මූල්‍ය ප්‍රකාශන මෙම වාර්තාවේ දින වන විටත් විගණනයට ඉදිරිපත් කර නොතිබුණි.

(ඇ)2006 අංක 12 දරන මුද්දර බදු පනත හා 2008 ජනවාරි 01 දිනැති අංක 1530/13 දරන ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය.	වටිනාකම රු.25,000ට වැඩි ගෙවීම සඳහා රු.25ක් වූ මුද්දර ගාස්තු අයකල යුතු වුවද අවස්ථා 69 දී රු.7,208,000ක ගෙවීම වලට අදාලව මුද්දර ගාස්තු අඩුකර ගෙන නොතිබුණි.

2.2.3 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 12 (උ) වගන්තියේ සඳහන් අවශ්‍යතාවය අනුව අධිකාරියේ බලතල , කර්තව්‍ය සහ කාර්යයන්ට අනුකූල නොවන ලෙස කටයුතු කර ඇති බව.

2.2.4 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 12(ඌ) වගන්තියේ සඳහන් අවශ්‍යතාවය අනුව මණ්ඩලයේ සම්පත් සකසුරුවම් ලෙස, කාර්යක්ෂම ලෙස සහ ඵලදායී ලෙස කාලසීමාවන් තුළ අදාළ නීතිරීති වලට අනුකූලව ප්‍රසම්පාදනය කර භාවිතා කර නොමැති බව.

2.3 වෙනත් කරුණු

(අ) ලබා දුන් අත්තිකාරම් මුදල වැය නොකර දින 22 සිට දින 148 දක්වා කාලයක රඳවාගෙන සිට සම්පූර්ණ වටිනාකම රු.537,400ක්ම පියවා තිබුණු අවස්ථා 05ක් නිරීක්ෂණය විය.

(ආ) ව්‍යවසායකයින්ට අවශ්‍ය වන තොරතුරු ඇතුළත් ව්‍යාපාර සංවර්ධන සේවා සැපයුම් නාමාවලියක් (Business Development Service Provider Directory) රු.852,070ක් වැයකර ඉංග්‍රීසි හා දෙමළ භාෂාවෙන් පිටපත් 500 බැගින් මුද්‍රණය කර තිබුණි. මෙම නාමාවලි බෙදාහැරීම සඳහා බෙදාහැරීමේ සැලැස්මක් නොතිබුණ අතර, මෙම වාර්තාවෙහි දිනය වන විට ඉංග්‍රීසි භාෂා පිටපත් 68ක් ඉතිරිව තිබූ අතර ඒවා නිසි පරිදි ගබඩා කර නොතිබුණි. තවද ඉතිරිව ඇති දෙමළ භාෂා පිටපත් පිළිබඳ තොරතුරු ඉදිරිපත් නොවුණි.

(ඇ) B Express Ltd. ආයතනයෙන් වසරක සිට ලැබිය යුතුව පවතින රු.170,712ක් අයකර ගැනීමට කටයුතු කර නොතිබුණි.

ඩබ්ලිව්.පී.සී. වික්‍රමරත්න
විගණකාධිපති